# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணைய இதழ் (சனிக்கிழமைதோறும்) • திருவள்ளுவர் ஆண்டு 2050 • ஏப்ரல் 27, 2019

Weekly E-paper • April 27, 2019



# அஞ்சி நடுங்கும் ஆளுங்கட்சி!

-சுப. வீரபாண்டியன்

## தேவையில்லை பொதுப்பட்டியல்



'பைந்தமிழ்' பாபு

## ஓர் எச்சரிக்கை



தலையங்கம்

## பெண் உடலை இலக்காக்கும் அதிகார மய்யம்!



மா.உதயகுமார்

# கருஞ்சட்டைத் தமிழர்

ஆசிரியர்: சுப.வீரபாண்டியன்

வார இணைய இதழ் (சனிக்கிழமைதோறும்) ● திருவள்ளுவர் ஆண்டு 2050 ● ஏப்ரல் 27, 2019 Weekly E-paper ● April 27, 2019


# அஞ்சி நடுங்கும் ஆளுங்கட்சி!

● சுப. வீரபாண்டியன்

‘அச்சம் வரும் முன்னே, தேர்தல் முடிவு வரும் பின்னே’ என்பதுபோல் ஆகிவிட்டது அதிமுகவின் நிலை. வரும் மே 23 ஆம் நாள் தேர்தல் முடிவுகள் எப்படியிருக்கும் - அதிலும் குறிப்பாக 22 சட்டமன்ற இடைத்தேர்தல்களின் முடிவுகள் எப்படியிருக்கும் என்று உளவுத்துறை அரசுக்குச் சொல்லாமலா இருக்கும்? சரியாகச் சொல்லிவிட்டது போலும். அதனால்தான், அடுத்து மூன்று சட்டமன்ற உறுப்பினர்கள் மீது நடவடிக்கை எடுக்க இப்போது முடிவு செய்துள்ளனர்.

கள்ளக்குறிச்சி பிரபு, அறந்தாங்கி ரத்தினசபாபதி, விருத்தாசலம் கலைச்செல்வன் ஆகிய சட்டமன்ற உறுப்பினர்கள் மூவர் மீதும் கட்சித் தாவல் சட்டத்தின்படி நடவடிக்கை எடுக்க வேண்டுமென்று, அதிமுக அரசின் சட்ட அமைச்சர் சண்முகமும், கொறடா ராஜேந்திரனும் அவைத்தலைவர் தனபாலிடம் கூறியுள்ளனர்.

அவர்களது கோரிக்கையை அலசி ஆராய்ந்து நியாயப்படி நடக்கக்கூடிய அவைத்தலைவரா தமிழகத்தில் உள்ளார்? இந்நேரம், பாட்டுக்குத் தகுந்த ஆட்டத்தை அவர் முடிவு செய்து நடவடிக்கையில் இறங்கியிருப்பார்.

அரசுக்கு எதிராகச் சட்டமன்றத்தில் வாக்களித்த, இன்றைய துணை முதல்வர் ஓ. பன்னீர்செல்வம் உள்ளிட்ட 11 மீது எந்தவிதமான கட்சித் தாவல் நடவடிக்கையும் இன்று வரையில் இல்லை. ஆனால் வேறு 18 பேர் மீது நடவடிக்கை எடுக்கப்பட்டு, ஏறத்தாழ ஒன்றரை ஆண்டுகாலம் அந்தத் தொகுதிகளுக்கு மக்கள் பிரதிநிதிகளே இல்லாத நிலை இருந்தது. இப்போதுதான் அவற்றுக்குத் தேர்தல் நடந்துள்ளது. ,ஏற்கனவே 97 உறுப்பினர்களைக் கொண்டுள்ள (88+8+1)திமுக தலைமையிலான கூட்டணி, இப்போது 22 இடங்களிலும் வெற்றி பெற்று விட்டால், 119 இடங்களைப் பெற்று



ஆளுங்கட்சியாகி விடும். அதைத் தடுக்க, இப்போது மூன்று பேரைத் தகுதி நீக்கம் செய்து, மீண்டும் அந்தத் தொகுதிகளில், தேர்தலைத் தள்ளிவைத்து, அதுவரையில், சட்டமன்றத்தில் வாக்கெடுப்பு நடத்தாமல், ஆட்சியைக் காப்பாற்றி விடலாம் என்று நினைக்கின்றனர்.

இவர்களின் ‘நாணயமான’ இந்த வழிமுறைகளைப் புரிந்துகொண்ட, எதிர்க்கட்சித் தலைவர், சட்டமன்ற அவைத்தலைவர் மீது நம்பிக்கையில்லாத் தீர்மானம் கொண்டுவருவோம் என்று கூறியுள்ளார். அதனைச் சட்டமன்றத்தில் எடுத்துக் கொண்டுதான் ஆக வேண்டும்.

பெரும்பான்மை அற்ற ஓர் ஆட்சியைக் காப்பாற்றிக் கொள்ள இன்னும் என்னென்ன வழிகள் உண்டோ அனைத்தையும் இவர்கள் சிந்திப்பார்கள். ஆனால் அனைத்துக்கும் தலையாட்டிய மத்திய அரசு இனி தில்லியில் இருக்காது என்பதை அவர்கள் சிந்திக்க மறந்து போனார்கள்! ●

## ‘தங்கத்துக்கு’ வாழ்த்துகள்!

ஒரு பண்ணைத் தொழிலாளியின் மகளாய்ப் பிறந்து, வறுமையை வென்று, தன் இயலாமைகளைப் புறந்தள்ளி, கத்தார் நாட்டில் நடைபெற்ற 800 மீட்டர் ஓட்டப்பந்தயத்தில் வெற்றிவாகை சூடி, இந்தியாவிற்குத் தங்கப் பதக்கத்தைப் பெற்று வந்திருக்கும் தமிழ்ப்பெண் கோமதி மாரிமுத்துவே, வருக, வருக! இன்னும் பற்பல வெற்றிகள் உன்னை நோக்கி ஓடிவர எங்களின் நெஞ்சார்ந்த வாழ்த்துகள்!

வீராங்கனையே வருக, வருக!



# தேவையில்லை பொதுப்பட்டியல்



● 'பைந்தமிழ்' பாபு

நமது நாடு ஒரு கூட்டாட்சி நாடு. அதாவது மத்தியில் ஓர் அரசும் மாநிலத்தில் ஓர் அரசும் என இரண்டு அதிகார அமைப்புகள் நாட்டை ஆள்வதால் நிர்வாகச் சிக்கல்கள் வரக்கூடும்.

அதனால், மத்திய, மாநில அரசுகள் எவ்வாறு அதிகாரங்களைப் பகிர்ந்து கொண்டால் சிறப்பாக இருக்கும் என்ற சிந்தனை ஏற்பட்டது.

பல்வேறு நாடுகளின் அரசியலமைப்புச் சட்டங்களை ஆராய்ந்து, அவற்றிலிருந்த சிறப்பம்சங்களை எடுத்து, அதில் நம் நாட்டிற்கு ஏற்றவாறு திருத்தங்களைச் செய்த சட்ட மேதை அண்ணல் அம்பேத்கர் தலைமையிலான குழு இந்திய அரசியலமைப்புச் சட்டத்தை வடிவமைத்தது.

இந்திய அரசியலமைப்புச் சட்டம் பிரிவு ஏழின் கீழ் மத்திய அரசு, மாநில அரசின் அதிகார எல்லைகள் வரையறுக்கப்பட்டுள்ளன.

இதன்படி மத்திய அரசின் கீழ் இருக்கும் துறைகளின் அதிகார முடிவுகளை மாநில அரசோ, மாநில அரசின் கீழ் இருக்கும் துறைகளின் அதிகார முடிவுகளை மத்திய அரசோ திருத்த முடியாது.

மூன்றாவதாக-

பொதுப்பட்டியலில் இருக்கும் துறைகளின் முடிவுகளை மாநில அரசும் மத்திய அரசும் சேர்ந்து எடுக்க சம உரிமை உள்ளது. எனினும் மத்திய அரசுக்கே கூடுதல் அதிகாரம் உள்ளது. மத்தியப் பட்டியலில் பாதுகாப்பு, அணுசக்தி, பணஅச்சடிப்பு என 97 துறைகள் உள்ளன.

அதேபோல் மாநிலப் பட்டியலில் வேளாண்மை, சிறைச்சாலைகள், கல்வி, விளையாட்டு என 66 துறைகள் இருந்தன.

ஆனால் 1976இல் இந்திரா காந்தி பிரதமராக இருந்த போது, நெருக்கடி நிலைக் காலத்தில் கல்வியும் விளையாட்டும் பொதுப்பட்டியலுக்கு மாற்றப் பட்டன.

கல்வி பொதுப்பட்டியலுக்கு மாற்றப் பட்டதால் மாநில அரசுகளுக்கும் அதில் மாற்றங்கள் செய்ய சம உரிமை உண்டு. ஆனாலும் மத்திய அரசின் கை ஓங்கி இருப்பதால் மாநில அரசால் ஒன்றும் செய்ய இயலாத நிலையே உள்ளது.

அது தான் நீட் தேர்வு தொடங்கி கல்வி சார்ந்த பல்வேறு விவகாரங்களிலும் நடைபெற்று வருகிறது.

எனவே தான் பொதுப் பட்டியலையே ஒழித்துவிட வேண்டும் என்று அறை கூவலை விடுத்துள்ளனர் புதிய குரல் அமைப்பைச் சார்ந்த தோழர்கள்.

பன்முகத் தன்மை கொண்ட நாட்டில், கல்வித் தரத்தை உயர்த்துவது என்ற பெயரால் மருத்துவம் சார்ந்த உயர் கல்விப் படிப்புக்கு தேசிய நுழைவுத் தகுதித் தேர்வு (நீட்) நடத்து வதையும், பல்கலைக்கழக நிதியுதவிக் குழுவை (யுஜிசி) கலைத்துவிட்டு உயர்கல்வி ஆணையம் அமைக்கும் நடவடிக்கையையும் மத்திய அரசு கைவிட வேண்டும்.

கல்வியைப் பரவலாக்கவும், சமச்சீராக அமைக்கவும், அனைவருக்கும் கட்டாயமாகக் கல்வி தந்திடவும், கல்வியைப் பொதுப் பட்டியலில் இருந்து மாநில அரசின் அதிகாரப் பட்டியலுக்கு மாற்றி வழங்க மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும் என தமிழ்நாடு ஓய்வுபெற்ற கல்லூரி ஆசிரியர் கழக மாநில மாநாடு வலியுறுத்தியுள்ளது.

நாடு முழுவதும் உள்ள கல்வியாளர்களும், திமுக உள்ளிட்ட பல்வேறு மாநிலக் கட்சியிகளும் கல்வியைப் பொதுப் பட்டியலில் இருந்து மாநிலப் பட்டியலுக்கு கொண்டு வரும் முயற்சிகளை மேற்கொண்டு வருகின்றனர்.

அதன் பயனாக காங்கிரஸ் கட்சி வெளியிட்டுள்ள தேர்தல் அறிக்கையில் கல்வி மாநிலப் பட்டியலுக்கு மீண்டும் கொண்டு வரப்படும் என அறிவித்துள்ளது.

மத்தியில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி ஆட்சி அமையட்டும். மாநில உரிமைகள் மீட்டெடுக்கப்படட்டும். •

ஆசிரியர்
சுப.வீரபாண்டியன்

பொறுப்பாசிரியர்
எழில். இளங்கோவன்

ஆசிரியர் குழு
தமிழ்மறவன்
உதயகுமார்
வெற்றிச்செல்வன்

வெளியிடுபவர்
கோ.தினகரன்

இணையதளம்
www.keetru.com
www.peravai.com
www.peravainoolagam.com

மின் அஞ்சல்
karunchattai@gmail.com

டுவிட்டர்
suba_vee

தொடர்புக்கு
120 என்.டி. ராமராவ் தெரு
ரங்கராஜபுரம், கோடம்பாக்கம்
சென்னை - 600 024

தொலைபேசி: 044-4204 7162

கருஞ்சட்டைப் பதிப்பகம்

இணையத்தள விற்பனை (online sales)

கருஞ்சட்டைப் பதிப்பக வெளியீடுகளும்,
தோழர் சுபவீ,
பேராசிரியர் அருணன் ஆகியோர்
எழுதியுள்ள பிற நூல்களும்
இப்போது இணையத்தள
விற்பனையில் உள்ளன.

இந்தியாவின் எந்தப்பகுதியிலிருந்தும்
நூல்களை இணைய வழியில்
அனைவரும் பெற்றுக்கொள்ளலாம்.
வங்கி அட்டைகள் மூலமோ, அல்லது
வீட்டிற்குப் புத்தகம் வரும்போது பணம்
செலுத்தியோ நூல்களைப்
பெற்றுக் கொள்ளலாம்.

இணையத்தள முகவரி
karunchattaibooks.com

தமிழராய் வேர் பிடி! உலகெலாம் கிளை விரி!

# கருஞ்சட்டைத் தமிழர்

## ஓர் எச்சரிக்கைக் குரல்!

உச்ச நீதிமன்றத் தலைமை நீதிபதி ரஞ்சன் கோகாய் மீது சாட்டப்பட்ட பாலியல் குற்றச்சாட்டின் விசாரணையின் போது, உச்ச நீதிமன்றம் மத்திய அரசை கடுமையாகச் சாடியுள்ளது.

**“கடந்த 4 ஆண்டுகளாகவே நீதித்துறை செயல்படும் விதம் வேதனை அளிக்கிறது. மற்றவர்களால் பிளாக் மெயில் செய்யப்படும் நிலைக்கு நீதிபதிகள் ஆளாகியுள்ளனர். இந்த நிலை தொடர்ந்தால் நாம் நீடிக்க முடியாது. நெருப்புடன் விளையாட வேண்டாம் எனப் பணக்காரர்களுக்கும், அதிகாரத்தில் உள்ளவர்களுக்கும் சொல்ல வேண்டிய நேரம் வந்து விட்டது. அவர்கள் உச்ச நீதிமன்றத்தை ரிமோட் கன்ட்ரோல் மூலம் ஆட்டிப்படைக்கலாம் என நினைக்கிறார்களா? இதில் முடிவுக்கு வர வேண்டும்”.**

- இவ்வாறு உச்ச நீதிமன்றம் தன் கோபத்தை வெளிப்படுத்தி இருக்கிறது.

உத்தவ்சிங் பெயின்ஸ் என்ற வழக்கறிஞர் உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்த பிரமாண பத்திரத்தில் தலைமை நீதிபதியை நீக்கத் தன்னிடம் ரூ.1.5 கோடி பேரம் பேசப்பட்டதாகக் கூறியிருக்கிறார்.

தொழில் அதிபர் அனில் அம்பானிக்கு எதிராக எரிக்சன் நிறுவனம் தொடர்ந்த வழக்கில் அம்பானி நீதிமன்றத்திற்கு நேரில் வரவேண்டும் என்று நீதிமன்றம் ஆணையிட்ட நிலையில், “அவர் நேரில் வரத் தேவயில்லை” என நீதிமன்ற ஆணையை மாற்றித் தபன்குமார் சக்கரவர்த்தி, மானவ் குமார் ஆகிய இரு நீதிமன்றப் பணியாளர்கள் இணையத்தில் செய்தி வெளியிட்டு இருக்கிறார்கள்.

இந்த நிகழ்வுகளைப் பார்க்கும்போது நீதிமன்றத்தின் கண்டனம் எவ்வளவு நியாயமானது என்று தெரிய வருகிறது.

தனித்துவத்தோடு செயல்பட வேண்டிய இந்திய ரிசர்வ் வங்கி, மத்தியப் புலனாய்வு அமைப்பு, தேர்தல் ஆணையம் போன்றவைகளை மத்திய ஆளும் பாஜக அரசு எப்படித் தன் கைப்பாவைகளாக மாற்றி ஆட்டிப்படைக்கிறதோ, அப்படியே உச்ச நீதிமன்றத்தையும் தன் கைப்பாவையாக மாற்றத்துடிக்கிறது என்பதை உச்சநீதி மன்றக் கண்டனம் நாட்டுக்கு உணர்த்துகிறது.

முன்னாள் தலைமை நீதிபதி மிஸ்ராவைப் போல தற்போதைய நீதிபதி ரஞ்சன் கோகாயை நினைத்து விட்டது மத்திய அரசு.

நாட்டுமக்களின் கடைசிப் புகலிடமாக இருக்கும் நீதிமன்றத்தில் கைவைக்க நினைக்கும் பாஜக மோடி அரசின் நோக்கம் என்ன என்பதும் நாட்டுக்குப் புரிந்து விட்டது.

ஒரே நாடு, ஒரே மொழி, ஒரே கலாச்சாரம், ஒரே சட்டம், ராமராஜ்ஜியம், அது சர்வாதிகாரம் என்பதற்கான அறிகுறி இது.

ஹிட்லர், முசோலினி, போன்ற நாசிசப், பாசிசவாதிகளை விடக் கூடுதலாக ஆர்.எஸ்.எஸ்- பாஜக பேர்வழிகளிடம் எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என்பதற்கான குரலே இந்த நீதிமன்றக் கண்டனம்.

# பெண் உடலை இலக்காக்கும் அதிகார மய்யம்!

● மா.உதயகுமார்

பல நூற்றாண்டுகளாகப் புற உலகம் மறுக்கப்பட்டு, வீட்டிற்குள் அடிமைகளாக அடக்கிவைக்கப்பட்டிருந்த பெண்கள் இந்த நூற்றாண்டில்தான் கல்வி கற்கவும், பணிக்குச் செல்லவும் தொடங்கியிருக்கிறார்கள். இந்த உரிமை அவ்வளவு எளிதில் கிடைத்துவிடவில்லை. வரலாற்றில் பல போராட்டங்களாலும், பலருடைய பயன் கருதாத தொண்டாலும் இது நிறைவேறியிருக்கிறது. இந்தியாவைப் பொருத்த வரையில், தென்னிந்தியாவில், குறிப்பாகத் தமிழ்நாட்டில் திராவிட இயக்கத்தின் ஒரு நூற்றாண்டுப் போராட்டத்தால் அதிக அளவில் பெண்கள் உயர் கல்வி கற்கும் சமூக முன்னேற்றம் ஏற்பட்டிருக்கிறது. இதனைப் பல ஆய்வறிஞர்கள் ஆதாரப் பூர்வமாக உறுதிப்படுத்தியிருக்கிறார்கள்.

*"In fact, we don't have to cross borders to imagine an environment less crushing of Indian women's capacities. In the states of southern India, development indices and daily freedoms have long been different from those across the northern states."*

*"Incarnations - India in 50 lives", Sunil Khilnani / Chapter 34, Periyar (Page - 380)*



தந்தை பெரியாரைப் பற்றிய ஆய்வுக்கட்டுரையில் சுனில் கில்னனி இவ்வாறு குறிப்பிடுகிறார். வடஇந்தியப் பெண்களின் வாழ்க்கை நிலையை ஆய்வு செய்து பார்த்துவிட்டு அதைத் தென்னிந்தியப் பெண்களின் வாழ்க்கை நிலையோடு ஒப்பிட்டு அவர்கள் அடைந்திருக்கும் முன்னேற்றத்தை மேலே உள்ள வரிகளில் "சுட்டிக் காட்டுகிறார். தமிழ்நாட்டையும் தாண்டி, தென்னிந்தியப் பெண்களின் வாழ்க்கை நிலையே பெரியாரின் தாக்கத்தால் முன்னேற்றமடைந்திருக்கிறது என்கிற கருத்தை அவர் தன்னுடைய ஆய்வில் முன்வைக்கிறார்.

தமிழ்நாட்டிற்கு சமூகநீதிக் களத்தில் இவ்வளவு பெரிய வரலாற்றுப் பெருமை இருக்கிற போது அதற்குப் பங்கம் விளைவிக்கும் வண்ணம் நடந்தேறும் சம்பவங்களைப் பார்க்கும் போது கலக்கம் தான் ஏற்படுகிறது.

அதுவும் அண்மைக் காலத்தில் பொள்ளாச்சி பாலியல் வன்கொடுமையின் தாக்கமே இன்னும் மக்கள் மத்தியில் ஓயாத நிலையில் மீண்டும் அதே போன்ற நிகழ்வுகள் பெரம்பலூரிலும் நடந்திருப்பது கண்டிக்கத்தக்கது. இவ்வளவு நடந்தும் அரசு மெத்தனப் போக்கைக் கடைப்பிடிப்பதிலிருந்து குற்றவாளிகள் அரசுக்கு நெருக்கமானவர்கள் என்பது உறுதியாய்த் தெரிகிறது.

வரலாறு அறியாதவர்களால் வரலாறு படைக்க முடியாது என்பதைத் தாண்டி, வரலாற்றுக்குக் களங்கம் ஏற்படும் அவலநிலையையும் தமிழ்நாடு சந்தித்துக் கொண்டிருக்கிறது. இந்த அதிமுக ஆட்சியையும் வரலாற்றில் திராவிடக் கட்சியின் ஆட்சி என்று தானே எழுதப்போகிறார்கள். திராவிட இயக்கக் கொள்கைகளே தெரியாமல் அடிமைகளாகப் பார்ப்பனியத்தால் வளர்க்கப்பட்டவர்கள் அதிமுகவினர். அந்த அடிமைகளில் சிறந்த அடிமைகள் தான் தற்போது அமைச்சர்களாக வலம் வருகிறவர்கள். தாங்கள் அதிகாரத்தைக் கைப்பற்ற வேண்டும் என்றாலோ அல்லது அதிகாரத்தைக் காப்பாற்றிக் கொள்ள வேண்டும் என்றாலோ சூழல் கருதிச் சில சமயம் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பேசுவார்கள், பல சமயம் பார்ப்பனியத்திற்கு வெண்சாமரம் வீசுவார்கள்.

பெரும்பாலும் இவர்கள் திராவிட இயக்கக் கொள்கைகளைப் பேசுவதெல்லாம் திமுக வோடு போட்டி போடுவதற்கு மட்டுமே. இப்படிப்பட்டவர்கள் ஆட்சியில் அவலங்களைத் தவிர வேறு என்ன நடக்கும்?

உயர் கல்வி கற்று, நல்லதொரு பணி செய்து கண்ணியத்துடன் வாழ நினைக்கும் பெண்களுக்கு எவ்வளவு இன்னல்களை இந்த ஆணாதிக்கச் சமூக அமைப்பு தருகிறது. பெண் வெறும் உடலாக மட்டுமே இன்னும் பார்க்கப்படுகிறாள். சமூகம் இப்படிப்பட்ட நோயால் பாதிக்கப்பட்டிருக்கிற போது அதைக் களைய வேண்டிய மருத்துவரான அரசே கண்டுகொள்ளாமல் இருந்தால் இந்த நோயைக் களைவதற்கு எங்கு போவது? இந்த அரசை மாற்றுவதைத் தவிர வேறுவழியில்லை.

ஒரு பக்கம் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பெண் உடலுக்கு இச்சை கொள்வது, இன்னொரு பக்கம் அதே பெண்ணின் உடலை ஆயுதமாகப் பயன்படுத்தித் தங்களுக்கு வேண்டாதவர்களை மிரட்டுவது. இந்த அவல நிகழ்வுகளைத்தான் இந்த நாடு அண்மைக் காலங்களில் சந்தித்து வருகிறது. பெண்ணின் உடலையே இவர்கள் சுற்றிச் சுற்றி வருகிறார்கள். (எல்லாப் பெண்களின் புகார்களையும் குறிப்பிடவில்லை. இதனை ஆதாயத்திற்காகப் பயன் படுத்துபவர்கள் மட்டுமே குறிப்பிடப்பட்டிருக்கிறார்கள்.)

இத்தனை பெண்கள் பாதிக்கப்பட்டிருக்கிறார்கள். இவ்வளவு நிகழ்வுகள் அம்பலமாகியிருக்கின்றன. ஆனால் உண்மையில் அதிகாரத்தைப் பயன்படுத்திப் பெண்ணை அடைய விரும்பியவர்கள் யாரும் இன்னும் அம்பலத்திற்கு வரவில்லை. இன்றைக்கு வேண்டுமானால் அவர்கள் கையில் இருக்கும் அதிகாரம் என்னும் வாள் அவர்களைப் பாதுகாக்கலாம். ஆனால் ஒரு நாள் அதே வாள் இன்னொரு ஆட்சியாளரின் கைக்கு மாறும் போது இவர்களைப் பதம் பார்க்கும்.

காவல் துறையின் மீதும், மத்தியப் புலனாய்வுத் துறையின் மீதும் மக்கள் நம்பிக்கையிழந்து விட்டனர். சரியான சான்றுகளை, சாட்சிகளை நீதிமன்றத்தில் சேர்ப்பதில்லை. அதனால் இது போன்ற அதிகார மையத்தில் இருப்போர் பலர், குற்றத்தை உறுதிபடுத்தப் போதிய ஆதாரம் இல்லாமல் விடுவிக்கப்படுகின்றனர்.

இந்த நிலை இப்படியே தொடர்ந்தால் மக்கள் அவநம்பிக்கையிலேயே வாழ்க்கையைக் கழிப்பார்கள். பெண்கள் கண்ணியத்தோடு வாழ முடியாது. இந்தச் சமூகமே முன்னேற்றத்தில் பின் தங்கிவிடும்.

Publisher G.Dinakaran. Editor Suba. Veerapandian, General Secretary, Dravida Iyyakka Tamilar Peravai.